சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 09.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். NC 587/E/2022 & NC 961/E/2022 (SA 10161/E/2021)**

திரு.M.கருணாகரன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
மதுரவாயல் வட்டம்,
சென்னை மாவட்டம் .

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 04.02.2022 மற்றும் 06.08.2025 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திருமதி.செல்வராணி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மதுரவாயல் வட்டம், சென்னை மாவட்டம் அவர்கள் இவ்வாணையத்தில் 18.03.2026-ல் நேரில் ஆஜராகி, 17.03.2026 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு அலுவலர் / வட்டாட்சியர், மதுரவாயல் அவர்களின் அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான ஆவணங்களை சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் 20.08.2025 அன்று மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி ஆவணங்களை பார்வையிட மனுதாரர் அழைக்கப்பட்டுள்ளார். அதன்படி மனுதாரர் சார்பு அவரது மகன் திரு.திலீபன் அவர்கள் 21.08.2025 அன்று பொது அதிகார அமைப்பில் ஆஜராகி ஆவணங்களை பார்வையிட்டு (புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது), மனுதாரர் சார்பு அவரது மகன், பொதுத் தகவல் அலுவலரிடம் சமர்ப்பித்துள்ள 21.08.2025 தேதியிட்ட எழுத்து மூலமான கடிதத்தில், 21.08.2025 அன்று அலுவலகத்தில் உள்ள கோப்புகள் அனைத்தும் பார்வைக்கு கொண்டு வரப்பட்டதாகவும், போதுமான தகவல்கள் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், 06.08.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின் அடிப்படையில், இவ்வழக்கு குறித்து 04.02.2022 தேதியிட்ட இவ்வாணைய உத்தரவினை நிறைவேற்றத்

தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் முன்னாள் ஓய்வு பெற்ற வட்டாட்சியர் திருமதி.சசிகலா எனவும், அவர் பொதுத் தகவல் அலுவலராக மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்த காலத்திற்கு விளக்கம் கேட்டு குறிப்பாணை அனுப்பப்பட்டதாகவும், மேற்படி குறிப்பாணை No Such Person என அஞ்சல் துறையால் குறிப்பிடப்பட்டு கடிதம் தருப்பி வரப்பெற்றதாகவும் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். **எனவே, இதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை இல்லை என ஆணையத்தால் கருதப்படுகிறது**.

4. மேலும், 06.08.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, இவ்வழக்கு குறித்த அறிக்கையினை இவ்வாணையத்தில் சமர்ப்பிக்கத் தவறிய முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/ துணை வட்டாட்சியர், மதுரவாயல் வட்டம், தற்போது மண்டல துணை வட்டாட்சியர், மாதவரம் வட்டத்தில் பணிபுரியும் திருமதி.மஞ்சு பார்கவி அவர்களிடம் விளக்கம் கோரப்பட்டதாகவும், அவரது விளக்கக் கடிதத்தில், 06.08.2025 தேதியிட்ட ஆணையத்தின் உத்தரவுப்படி, இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான ஆவணங்களை சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் பார்வையிட மனுதாரர் 07.08.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக அழைக்கப்பட்டு, அதன்படி மனுதாரர் சார்பு அவரது மகன் மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி ஆவணங்களை பார்வையிட்டார் எனவும், அதற்கான வாக்குமூலத்தினையும் சமர்ப்பித்துள்ளார் எனவும், ஆனால் தேர்தல் சிறப்பு சுருக்க திருத்தப் பணி மிக அவசரமாக நடைபெற்ற காலணத்தினால், மேற்படி அறிக்கையினை ஆணையத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை எனவும், இனிவரும் காலங்களில் இதுபோன் தவறுகள் நேரா வண்ணம் செயல்படுவதாக தெரிவித்துள்ளார். **மேற்படியாரின் விளக்கத்தினை ஆணையம் ஏற்கிறது**.

5. இவ்வழக்கில் ஆணையத்தின் 06.08.2025 தேதியிட்ட உத்தரவு நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண். NC 587/E/2022 & NC 961/E/2022 (SA 10161/E/2021)</u>

<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரவாயல் வட்டம், சென்னை மாவட்டம்.

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு.M.கருணாகரன்,
க.எண்.5/1, மாதவன் தெரு,
பாரதி சாலை, ராமாபுரம், சென்னை மாவட்டம்- 600 089.

Copy to: File MP/PA,